# தி.மு.க. முப்பெரும் விழா - 2024 (சென்னை) விருது பெறுவோர் வாழ்க்கைக் குறிப்புகள்!

## திருமதி பாப்பம்மாள் (எ) இரங்கம்மாள்

### பெரியார் விருது



**கோ**வை மாவட்டத்தில் திரு. மருதாசல முதலியார் - திருமதி வேலம்மாள் இணையரின் மூத்த மகளாக 10.3.1916 அன்று பிறந்தவர் திருமதி பாப்பம்மாள் (எ) இரங்கம்மாள். பேரறிஞர் அண்ணா மீது பற்று கொண்டு கழகம் தொடங்கிய காலத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் மீது மாறாத பற்றும் பாசமும் கொண்டிருந்த பாப்பம்மாள், கழகம் நடத்திய 15 மாநில மாநாடுகள் உள்ளிட்ட அனைத்து மாநாடுகளிலும் கலந்து கொண்டவர்.

1965ஆம் ஆண்டு கழகம் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கி, அனைத்து போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டு களம் கண்டவர் பாப்பம்மாள்.

அகவை 108-ஐ கடந்த நிலையிலும் 'நீட்' தேர்வுக்கு எதிராக கழக இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்த கையொப்பம் திரட்டும் போராட்டத்தில் பல நூறு பேரிடம், அவரே இணைய வழியிலும் - நேரில் சென்றும் கையொப்பம் திரட்டினார்.

இந்திய விடுதலைக்குப் பிறகு, கழகம் போட்டியிட்ட அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களிலும் கழகம் வெற்றி பெறப் பணியாற்றி உள்ளார். சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் வரை வாக்களித்துள்ளார் என்பதை பி.பி.சி. நிறுவனம் தனது தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒளிபரப்பில் ஒரு குறு ஆவணமாக உலகம் முழுவதும் சென்று சேரும் வகையில் வெளியிட்டுள்ளது.

1959ஆம் ஆண்டு தேக்கம்பட்டி ஊராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1964-ல் காரமடை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினராகவும், பின்னர் தேக்கம்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று பணியாற்றினார்.

1970ஆம் ஆண்டு தொடங்கி 45 ஆண்டுகாலம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உழவர் விவாதக்குழு உறுப்பினராகச் செயல்பட்டார்.

1965ஆம் ஆண்டிலேயே மாதர் சங்கத் தலைவராகச் செயல்பட்டு, கிராமப் பெண்களின் முன்னேற்றத்துக்கான சமூகப் பணிகளை மேற்கொண்டார்.

இவரது இயக்கப் பணிகளையும், முத்தமிழறிஞர் கலைஞர்மீது இவர் கொண்டுள்ள பாசத்தையும் அறிந்த மாண்புமிகு முதலமைச்சர் -கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இவரை தமது குடும்ப உறுப்பினர்களில் ஒருவராகப் பாசம் காட்டி வருகிறார். நீலகிரியில் நடைபெற்ற மூத்த உறுப்பினர்களை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவருக்கு பொற்கிழி வழங்கிப் பாராட்டினார்.

இவரது கழகப் பணியினை பாராட்டிடும் வகையில், தி.மு.க. பவளவிழா ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2024), சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **பெரியார் விருது**” வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**சென்னை**
**17.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முனைவர். எஸ். ஜெகத்ரட்சகன்

### கலைஞர் விருது



**1950** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி விழுப்புரம் மாவட்டம், வழுதாவூர் - கலிங்கமலை கிராமத்தில் கு.சாமிக்கண்ணு கவுண்டர், திருமதி லட்சுமி அம்மாள் இணையரின் ஆறாவது மகனாகப் பிறந்தார்.

வைணவ மரபுவழிக் குடும்பத்தில் பிறந்தவர் எனினும், பள்ளிப் பருவத்திலேயே பகுத்தறிவுப் பாசறையில் பாடம் பயின்றவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய இருவரின் எழுத்துக்கும் பேச்சுக்கும் இதயத்தைப் பறிகொடுத்துக் களமாடத் தொடங்கியவர்.

1965ஆம் ஆண்டு, தனது 15வது வயதில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைக் கோட்டம் கண்டவர்.

1966ஆம் ஆண்டில் பள்ளி மாணவனாக இருந்தபோதே வழுதாவூர் கலிங்கமலை தி.மு.கழகக் கிளைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

1968ஆம் ஆண்டில் சென்னை தாம்பரம் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் படிக்கும்போது, ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

கல்லூரிக் காலத்தில் பெரும் சிந்தனையாளர் டாக்டர் கோவூர் அவர்களை அழைத்து, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் கடவுள் மறுப்புப் பொதுக்கூட்டம் நடத்தியவர். பின்னர், தந்தை பெரியாரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றவர். அதன் காரணமாகக் கல்லூரியில் நீக்கி வைக்கப்பட்டவர்.

தனித் தமிழ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரிடம் மாணவராக ஐந்தாண்டு காலம் இருந்து தனித்தமிழ் கேட்டு வளர்ந்தவர். கழக மேடைகளில் அரசியல் அறிவோடும் - இலக்கியச் செறிவோடும் - கவித்துவக் கனத்தோடும் - இடியெனப் பேசி வலம் வந்தவர்; இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருப்பவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக ஒரு முறையும் - நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்து முறையும் - ஒன்றிய இணை அமைச்சராகவும் பொறுப்பு வகித்து மக்கள் பிரதிநிதியாக வலம் வருபவர் முனைவர் எஸ். ஜெத்ரட்சகன்.

முத்தமிழறிஞர் கலைஞரின் அளவற்ற அன்புக்கும், வாழ்த்துக்களுக்கும் ஆட்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்கள், ஜெகத்ரட்சகன் அவர்களை “ஆழ்வார்” என்று அன்போடு அழைப்பார். என் தம்பி இன்னொரு “சடையப்ப வள்ளல்” என்று கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர் ஜெகத்ரட்சகன்.

‘ஆழ்வார்கள் ஆய்வு மையம்’ என்ற இலக்கிய அமைப்பு நிறுவி, அதன் மூலம் ஏறத்தாழ 350 இலக்கிய நூல்களை படைத்துள்ளார். பழங்காலத் தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றை தேடிப் பதிப்பித்து தமிழுக்கும் தமிழர்க்கும் பெருங்கொடை அளித்துள்ளார். இவர் எழுதிய “நாவேந்தரும் பாவேந்தரும்” எனும் நூலும், “கருத்த மக்களின் உரத்த சிந்தனை” எனும் நூலும் பல்கலைக் கழகத்தில் முதுநிலை மாணவர்களுக்கு பாடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் மற்றும் நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகிய நூல்களுக்கு எளிய உரை எழுதி குறைந்த விலையில் வழங்கி வருகிறார்.

இவரது துணைவியார் நினைவில் வாழும் அனுசுயா. இவர்களுக்கு டாக்டர் சந்திப் ஆனந்த் என்ற மகனும், டாக்டர் ஸ்ரீநிஷா என்ற மகளும் உள்ளனர்.

திரு. எஸ்.ஜெத்ரட்சகன் அவர்களின் கழகப் பணியையும் - தமிழ்ப் பணியையும் பாராட்டி, தி.மு.க. பவளவிழா ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2024), சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“கலைஞர் விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**சென்னை**
**17.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மிசா சி.இராமநாதன்

### அண்ணா விருது



**ஒ**ருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், இன்றைய புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மாவடிக்கோட்டை கிராமத்தில் சின்னு சேர்வை, திருமதி சி.சண்முகமணி இணையரின் மகனாக 1.1.1943ஆம் ஆண்டு பிறந்தவர் சி.இராமநாதன். இவருடன் பிறந்தவர்கள் ஐந்து பேர்.

பள்ளிப் பருவத்தில் அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்ற தொடங்கிய சி.இராமநாதன், ஆவுடையார்கோவில் மற்றும் அறந்தாங்கியில் பள்ளிப் படிப்பையும், காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பட்டப் படிப்பையும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் பயின்றார்.

அழகப்பா கல்லூரியில் படித்த காலத்தில், மாணவர் பேரவைத் தலைவராக இருந்த இவர், அப்பகுதியில் உள்ள கல்லூரிகளில் படித்த மாணவர்களை இணைத்து மாணவர் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராக இருந்துள்ளார்.

சென்னை சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் 1968-69 ஆண்டு காலத்தில் தமிழ்மன்றச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்த இவர், சட்டக் கல்லூரி வளாகத்தில் அறிஞர் அண்ணா சிலை நிறுவியவர்களில் இவரும் ஒருவர்.

1974ல் ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஐந்து முறை தொடர்ந்து பொறுப்பு வகித்த இவர், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தலைமைக் கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார்.

1965ஆம் ஆண்டில் ஆவுடையார்கோவில் ஒன்றியம், பூவலூர் ஊராட்சி மன்றத் தலைவராக 13 ஆண்டுகள் பொறுப்பு வகித்த இவர், பின்னர் ஆவுடையார் கோவில் ஒன்றியக்குழு உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார். அறந்தாங்கி கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஆவுடையார்கோவில் வட்ட வீட்டுவசதி சங்கங்களின் தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

1976ஆம் ஆண்டு நெருக்கடிகாலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் திருச்சி மத்திய சிறைச் சாலையில் இருந்த இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார். இவரது சகோதரர் மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த சி.அம்பிகாபதி 45 நாட்கள் D.I.R. கைதியாக திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இவர் மிசா கைதியாக சிறையில் இருந்த நேரத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவரது இல்லத்திற்கு சென்று மதிய உணவு உட்கொண்டதை தனது வாழ்நாளில் கிடைத்த பெரும் பேறாக கருதும் சி.இராமநாதன் அவர்களுக்கு இரா.காவேரி என்ற மனைவியும் ஒரு மகனும், மூன்று மகள்களும் உள்ளனர்.

இவரது கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தி.மு.க. பவளவிழா ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2024), சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“அண்ணா விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**சென்னை**
**17.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கவிஞர்.தமிழ்தாசன்

### பாவேந்தர் விருது



**சி**வகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட வன்னியன்சூரக்குடி எனும் சிற்றூரில் 30.9.1954 அன்று திரு.இராமையா, திருமதி மாரியம்மாள் ஆகியோரின் மூத்த மகனாகப் பிறந்தார். ஆத்தங்குடியில உள்ள நேரு நடுநிலைப் பள்ளியிலும், பள்ளத்தூரில் உள்ள அருணாசலம் செட்டியார் உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பையும், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்பையும் சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார்.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, பள்ளி மாணவனாக இருந்த தமிழ்தாசன் மற்றும் நண்பர்கள் உள்ளிட்ட 12 பேரை பேருந்துகளை மடக்கினார்கள் என்று குற்றம் சாட்டி ஒருவார காலம் சிறையில் அடைத்தனர்.

திராவிட இயக்கத் தலைவர்களான தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் எழுத்து, பேச்சுக்களால் கவரப்பட்டு தானும் ஒரு பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் உருமாறி கழகப் பணியாற்றி வருகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வழியில் தானும் ஒரு கவிஞராக மாறி யாப்பிலக்கணப்படி கவிதைகளை எழுதி அவையனைத்தும் முரசொலியில் வெளிவந்துள்ளன.

சென்னை, சேப்பாக்கம் தொகுதியில் கழக உறுப்பினராக உள்ள இவர், வட்ட பிரதிநிதியாகவும், பகுதி பிரதிநிதியாகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் - சேப்பாக்கம் பகுதி இளைஞர் அணி, இலக்கிய அணிச் செயலாளராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றியுள்ளார். தற்போது தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

கழகம் அறிவித்து நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 29 முறை சிறைவாசம் அனுபவித்துள்ளார். 1986ஆம் ஆண்டில் இவர், சிறையில் இருந்த காலத்தில், இவரது தங்கை பார்வதி திருமணம் நடைபெறவுள்ள செய்தியறிந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிணையில் செல்ல இவரிடம் கூறியும், இவர் பிணை கோராமல் சிறையிலேயே இருந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்தாசன் அவர்களுக்கு நூல்களுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில், “தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக்காக திராவிட இயக்கம் ஆற்றி வரும் பணிகள் பலவற்றை விரித்தும் தொகுத்தும் எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகள் ஒவ்வொன்றிலும் இடம்பெற்றிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்” என்று புகழுரை வழங்கியுள்ளார்.

தமிழ்தாசன் அவர்கள் 4.2.1984 அன்று கௌசல்யா அவர்களை மணம் புரிந்தார். இவ்விணையருக்கு, கோமல் என்ற மகள் உள்ளார். இவர் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார்.

இவரது கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தி.மு.க. பவளவிழா ஆண்டில், தலைமைக் கழகத்தின் சார்பில் இன்று (17.9.2024), சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் முப்பெரும் விழாவில், மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் **“பாவேந்தர் விருது”** வழங்கிச் சிறப்பிக்கிறார்.

**சென்னை**
**17.09.2024**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**